# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:144 தேதி:-24.06.2014

## பொதுச் செயலர் GM (Estt.) மற்றும் GM (Admin) ஆகியோருடன் சந்திப்பு

அன்பார்ந்த தோழர்களே,

நமது பொதுச் செயலர் தோழர் P.அபிமன்யு மற்றும் உதவி பொதுச் செயலர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி ஆகியோர் 23.06.2014 அன்று GM (Estt.) ஐ சந்தித்து கீழ்கண்டவற்றை விவாதித்தனர்.

1. TTA விலிருந்து JTO வாக பதவி உயர்விற்கு எதிராக CAT அளித்த தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்ய வேண்டும்.

JTO LICE தேர்விற்கு cat அளித்த தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்ய BSNL கார்பரேட் அலுவலகம் தமிழ் நாடு தொலை தொடர்பு வட்டத்திற்கு உத்தரவிட்டுள்ளது. அதற்கான அப்பீல் மனு கார்பரேட் அலுவலகத்தால் இறுதி செய்யப்பட்டுவிட்டது. இந்த அப்பீல் மனு 2/3 நாட்களில் சென்னைக்கு அனுப்பபடும் என்று தெரிவிக்கப்பட்டது.

2. Ex-Servicemen JTO LICE தேர்வு முடிவுகள் வெளியீடு.

ராணுவத்தில் Group C ஆக பணிபுரிந்த காலத்தை JTO LICE தேர்வு எழுதுவதற்கு qualifying service க்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அலகாபாத் CAT இறுதி தீர்ப்பு வழங்கியுள்ளது. இந்த தீர்ப்பை அமலாக்க வேண்டும் என்றும், முன்னதாக தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்கப்பட்டவர்களுக்கு மேற்கண்ட உத்தரவு படி முடிவுகளை அறிவிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. GM (Estt.) ஆவண செய்வதாக ஒத்துக்கொண்டுள்ளார்.

3. 01.10.2000 க்கு முந்தைய பதவி உயர்விற்கு IDA சம்பள நிர்ணயம் செய்ததால் ஏற்படும் சம்பள பிடித்தம்:

01.10.2000 க்கு முந்தைய பதவி உயர்விற்கு IDA சம்பள நிர்ணயம் செய்ததால் ஏற்படும் சம்பள பிடித்தத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரப்பட்டது. பிடித்தத்தை நிறுத்துவதற்கு உடனடியாக அனைத்து மட்டங்களுக்கும் 26.06.2014 அன்று நடைபெற இருக்கும் Standing Committee க்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும் என்றும் கோரப்பட்டது.

4. திருத்தப்பட்ட JTO RR - BSNL போர்டு ஏற்பது சம்பந்தமாக

அரசாங்கத்தின் சார்பாக கலந்து கொள்ளும் இரண்டு இயக்குநர்கள் கலந்து கொள்ளாத காரணத்தினால் திருத்தப்பட்ட JTO RR கடந்த இயக்குநர் குழு கூட்டத்தில் விவாதிக்கப்படவில்லை. அடுத்து கூட்ட தேதியும் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. நமது மத்திய சங்கம் தொடர்ந்து தலையிட்டு கூடிய விரைவில் இயக்குநர் குழு ஒப்புதலை பெற முயற்சி செய்யும். JTO வாக officiating செய்துகொண்டிருக்கும் 1800 பேர் Regular ஆவதற்கும், Qualifying Service ஐ 7 வருடத்திலிருந்து 5 வருடமாக குறைப்பதற்கும் புதிய JTO RR ஐ BSNL இயக்குநர் குழு ஏற்பது அவசியமாகும்.

**5. TM தேர்விற்கு கல்வி தகுதியை தளர்த்துதல்.**

10வது முடிக்காத Gr"D மற்றும் RM ஆகியோரை TM தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும் என்று ஊழியர் தரப்பில் அழுத்தமாக கோரப்பட்டது. மேலும் தற்போதுள்ள RR படி TM தேர்விற்கான Notification ஐ திரும்பப்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

**6. அகமதாபாத் நகரத்தை HRA வுக்காக தரம் உயர்த்தல்**

மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி அகமதாபாத் நகரத்தை வீட்டு வாடகைப் படிக்காக தரம் உயர்த்தவேண்டும் என்று நாம் கோரிக்கை வைத்தோம். ஆனால் இந்த முடிவை அரசாங்கம் தான் எடுக்க முடியும் என்றும் இதனை அரசாங்கத்திற்கு அனுப்பி வைப்பதாகவும் GM (Estt.) தெரிவித்தார்.

**7. குஜராத் மாநிலத்தில் JTO LICE தேர்வு முடிவு வெளியிடவேண்டும்.**

குஜராத் மாநிலத்தில் BSc (Physics) படித்து JTO தேர்வு எழுதியவர்களின் தேர்வு முடிவுகள் வெளியிடப்படாமல் இருக்கிறது. எனவே தேர்வு முடிவுகளை உடனடியாக வெளியிட வேண்டும் என்று கோரினோம். University of Gujarat இடமிருந்து விளக்கம் கிடைக்கப்பெற்றவுடன் முடிவு அறிவிக்கப்படும் என்று GM(Estt.) தெரிவித்தார்.

**தோழர் P.அபிமன்யு மற்றும் உதவி பொதுச் செயலர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி ஆகியோர் 23.06.2014 அன்று GM (Admin.) ஐ சந்தித்து கீழ்கண்டவற்றை விவாதித்தனர்.**

**1. Non-Executive ஊழியர்களுக்கு ரூ.200/- க்கான இலவச சிம்**

Non-Executive ஊழியர்களுக்கு ரூ200/- மதிப்பிலான இலவச சிம் கார்டு வழங்குவதற்கு Management Committee ஏற்கனவே ஒப்புதல் வழங்கிவிட்டது. விரைவாக உத்தரவிட வேண்டுமென்று நமது பொதுச் செயலர் கோரிக்கை விடுத்துள்ளார்.

**2. Sports and Cultural Board Meeting**

Sports and Cultural Board கூட்டம் ஜூலை மாதம் இரண்டாவது வாரத்தில் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

**3. Welfare Board Meeting**

Welfare Board கூட்டம் நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று GM (Admin) தெரிவித்தார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(S.செல்லப்பா)**
**மாநிலச்செயலாளர்.**